**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**O.S No.100/2019**

**PW.1** is solemnly affirmed on **14.08.2024** in accordance with the provisions of the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. சுமித்ரா | Husband Name | திரு. விசையகுமார். |
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

**முதல் விசாரணை :**

இந்த வழக்கில் நான் முதல் வாதி ஆவேன். வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நான் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது என்னுடைய கையொப்பம்தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். எனவே, அதனை என்னுடைய சாட்சியமாக கருத வேண்டுகிறேன். வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 15.03.2013 தேதியிட்ட எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமண அழைப்பிதழின் அசல்.

2) குடும்ப அட்டையின் நகல்.

3) எனது ஆதார் அட்டையின் நகல்.

4) 2 ம் வாதியின் ஆதார் அட்டையின் நகல்.

5) 3 ம் வாதியின் ஆதார் அட்டையின் நகல்.

6) 2 ம் வாதியின் மருத்துவ ரசீதுகளின் அசல்.

7) 08.11.2013 தேதியிட்ட 2 ம் வாதியின் பிறப்பு சான்றிதழின் நகல்.

8) 08.03.2016 தேதியிட்ட 3 ம் வாதியின் பிறப்பு சான்றிதழின் நகல்.

9) 27.04.2009 தேதியிட்ட 1 ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதர சகோதரிக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகல்.

10) 25.06.2017 தேதியிட்ட பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட C.S.R. நகலின் அசல்.

11) 12.12.2017 தேதியிட்ட பர்கூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட C.S.R. நகலின் அசல்.

12) 28.12.2017 தேதியிட்ட 1 மற்றும் 2 பிரதிவாதிள் பெயரளவில் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல்.

13) 02.12.2017 தேதியிட்ட நான் 3 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல்.

14) 05.12.2017 தேதியிட்ட 3 ம் பிரதிவாதி கையொப்பமிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல்.

15) 21.06.2023 தேதியிட்ட ஸ்ரீ விஜய் விஹாஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் இளவர் V. கிரிஷ்-க்கு செலுத்திய பள்ளி கட்டண ரசீதின் அசல்.

எனது நிருபண பிரமாண வாக்குமூலத்தையும், என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்சொன்ன ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்து ஏற்றுக்கொண்டு, வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal District Judge,
Krishnagiri.